136

ரக்ஷகர் துணை.

டி. ஜி. ஜெகநாதநாயுடு, டி. ஜீ. சுந்தரநாயுடு,
பாதநவினை ஜானகியம்மாள் முதலிய
பற்பல நாடகக்கம்பெனியாரால் பாடப்படும்
இந்துஸ்தானி வர்ணமெட்டுகளால் அமைந்துள்ள
கற்பூரிக்கும் பாக்கள்

# யோசேப்பின் சரித்திரம்.

முதற் பாகம்.

(இசை)

சாகைபுரம் சேசசம் தத்தத்துப்பட்டி யென்ற
ஜெகவீரபுரம் கிராமம் என். ஆர். ஸி. மிஷன் எலிமென்டரி
ஸ்கூல் ஹெட்மாஸ்டர்

A. ஜோதிமுத்து உபாத்தியாயரால்
இயற்றியது.

மதுரை
அஷ்டலக்ஷ்மி விலாச அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை] 1921 [அணா 4.



ரக்ஷகர் துணை.

டி. ஜி. ஜெகநாதநாயுடு, டி. எ[illegible] சுந்தர[illegible]
பாதநளின ஜானகியம்மாள் முதலிய
பற்பல நாடகக்கம்பேனியாரால் பாடப்படும்
இந்துஸ்தான் வர்ணமெட்டுகளால் அமைந்துள்ள
கற்புமிகும் பக்தன்

---

# யோசேப்பின் சரித்திரம்.

---

முதற் பாகம்,

(இவை)

சகலாபுரம் சேகரம் சுத்தத்துப்பட்டி யென்ற
ஜெகவீரபுரம் கிராமம் எஸ். பி. ஜி. மிஷன் எலிமென்டரி
ஸ்கூல் ஹெட்மாஸ்டர்

*A.* ஜோதிமுத்து உபாத்தியாயரால்
இயற்றியது.

மதுரை
அஷ்டலக்ஷ்மி விலாச அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை] 1924 [அணா 4.

# இப் புஸ்தகம் வெளியிட உதவிபுரிந்தவர்கள் பெயரின் ஜாபிதா.

| கீ. ஜெகவீரபுரம் | ரூ. | அ. |
|---|---|---|
| வெ. உலகநாத பிள்ளை | 1 | 0 |
| தெ. பெ. ராமைய நாயக்கர் | 1 | 0 |
| தெ. சுந்தர நாயக்கர் | 1 | 0 |
| அ. கூடப்பன் சேருவை | 0 | 8 |
| அம்பலம்முத்தப்பநாயக்கர் | 1 | 0 |
| அா முத்தப்ப நாயக்கர் | 1 | 0 |
| மொ. ஆண்டி நாயக்கர் | 0 | 8 |
| வ. இ மு. நாகப்ப நாயக்கர் | 1 | 0 |
| இ சு முத்துச்சாமிநாயக்கர் | 1 | 0 |
| இ. மு ராமசாமி நாயக்கர் | 1 | 0 |
| பே. குருசாமி நாயக்கர் | 1 | 0 |
| எ. கோபாலு நாயக்கர் | 0 | 8 |
| கோ. கல்லைய நாயக்கர் | 1 | 0 |
| ல. குருசாமி நாயக்கர் | 0 | 8 |
| ப சு. நல்லைய நாயக்கர் | 1 | 0 |
| அழகரப்பனாச்சாரி | 1 | 0 |
| குமாரவேலாச்சாரி | 1 | 0 |
| முத்து சேருவைகாரர் | 0 | 8 |
| இ பூ. வேதநாயக நாடார் | 1 | 0 |
| பெ பூ. வீரபுத்திர நாடார் | 1 | 0 |
| பெ. சு. ராமைய நாடார் | 0 | 8 |
| அ. சுப்பய நாடார் | 0 | 8 |
| பெ. பூ. சர்க்கரை நாடார் | 0 | 8 |
| பே. வெங்கிடேசுர புரம் | | |
| அ. ராமசாமி நாயக்கர் | 1 | 0 |
| செ. சுப்பய நாயக்கர் | 1 | 0 |
| அ பொன்னையா நாயக்கர் | 0 | 8 |
| வெள்ளைச்சாமி நாயக்கர் | 0 | 8 |
| குமராண்டி ஆசாரி | 0 | 8 |
| உத்தண்டபுரம். | | |
| இ மூ. பெருமாள் நாயக்கர் | 1 | 0 |
| வ. பெருமாள் நாயக்கர் | 0 | 8 |
| கருப்பணன் செட்டியார் | 0 | 8 |
| கழுகாசல புரம். | | |
| பலவேச நாடார் | 1 | 0 |
| நல்லகருப்ப நாடார் | 1 | 0 |
| வ. பெருமாள் நாயக்கர் | 0 | 8 |
| சுந்தர நாயக்கர் | 1 | 0 |
| அய்யைய நாயக்கர் | 0 | 8 |

| மாவேலி ஓடை. | ரூ. | அ. |
|---|---|---|
| குமாரசெட்டிப் பிள்ளை | 1 | 0 |
| ஆழாக்கைதவேலு பிள்ளை | 1 | 0 |
| சோலையப்பமணியகாரர் | 0 | 8 |
| ஆ. சர்க்கரை நாடார் | 0 | 8 |
| இ. சிவமுருக நாடார் | 0 | 8 |
| இ. கருப்பண நாடார் | 0 | 8 |
| சு. சிவமுருக நாடார் | 1 | 0 |
| சேருவை காரன் பட்டி. | | |
| கஞ்சப நாயக்கர் | 1 | 0 |
| ராமசாமி நாயக்கர் | 1 | 0 |
| இ மு நாகைய நாயக்கர் | 0 | 8 |
| போ. ஜெகவீர புரம். | | |
| இ மூ. சங்கரலிங்கம்பிள்ளை | 1 | 0 |
| சங்கைய நாயக்கர் | 2 | 0 |
| பெருநாழி. | | |
| சரவண நாடார் | 1 | 0 |
| N. ஜீவானந்தம் உபதேசியார் | 1 | 0 |
| அ சுப்பையா நாடார் | 1 | 0 |
| சி. சொ. ரா. ம. தங்கையா நாடார் | 1 | 0 |
| ராமையா பிள்ளை | 0 | 8 |
| சின்னையா புரம். | | |
| மோசேசெட்டியார் | 2 | 0 |
| வெள்ளையா செட்டியார் | 0 | 8 |
| வெ. செல்லையா செட்டியார் | 1 | 0 |
| பொன்னையா நாடார் | 1 | 0 |
| தவசிலிங்க புரம். | | |
| மூ. நல்லுசாமி நாயக்கர் | 1 | 0 |
| வெ. சுப்பைய புரம். | | |
| பெருமாள் நாயக்கர் | 0 | 8 |
| கல் மடை, | | |
| G. தேவசகாயம் உபதேசியார் | 1 | 0 |
| மூந்தார் செல்லையாபுரம் | | |
| இராமஸ்வாமி செட்டியார் | 1 | 0 |



பக்தி மிகும்

# யோசேப்பின் சரித்திரம்.

## முதற் பாகம்.

### சுவாமி துதி.

விருத்தம்.

ஆதியந்தமில்லாதோன் சர்வ வல்லோன்
 ஆண்மையுடன் மாநிலத்தில் பாவிகட்காய்
தாவீது குலத்துதித்துத்தாணி மீதில
 தம்முயிரை யெம் மவர்க்காய்த்தந்த நீதன்
ஆதி ஆதாம் அபிரகாம் ஈசாக் வம்ச
 அனபனெனும் யோசேப்பு சரிதைபாட
ஏசுநாதசாமியே என்இருதயத்தில்
 இருந்தருள்வாய் ஏழைதினம் துதிசெய்தேனே

---

காம் சந்திர மோகனுதாஸ் காந்தியே—என்ற மெட்டு.

பல்லவி.

சத்திய சற்குருவான ஏசு சுவாமியே
தரைமீதினில் மனுவாகவே உருவாகிய திருமூர்த்தியே சு

1. அத்தியமே செய்திடுவேன் பக்தியுடன் பாடுவேன்
 ஜோதிபரி சுத்தனின் துணைதனையே நாடுவேன்
 தொல்புவிதனில் வந்த தூயனே மண்ணில்
அதித்தோன் பதம் நினைத்தேன் நிதம்
மதித்தேன் மனம் மகிழ்ந்தேனேசு—சுவாமியே

2. சத்திய ஆவியைச் சீஷன் தனக்கே அருளுவாய்
 நித்திய தேவனே வரம் அத்தனே தந்தருளுவாய்
 தலமீதில் நானே யோசேப் சரித்திரம் தானே
தனைப்பாடினேன் உனைத் தேடினேன்
மனப்பூர்வமாய் வரந்தா கோனே—சுவாமியே

---

## கதை துவக்கம்.

### யாக்கோபு முதல் விருத்தம்.

பாரதனில் புகழ் ஓங்கும் கானான் தேசம்
பாலுமதில் தேனுமிக ஓடும் நன்றாய்
சீருடன் கானான் தேசந்தனில் வாழும்
தீர்க்க மிகு யாக்கோபு யெனும் பெயரோன்
பார்க்குள் மிகு சந்தோஷ புயபலத்தோன்
பக்திதனில் முக்திபெறும் ஈசாகு புத்ரோன்
சீர் புகழுமெனது புத்ரர் சுகசெய்தியை
திடமுடனே அறிய இதோ சிந்தித்தேனே

முருகா என்றோருதரம்—என்ற மெட்டு.

பல்லவி.

பரனே உனை நம்பினேன் வரமருள் புரிவாயே
திரமில்லாத எந்தன் குறைகள் நீக்கி மைந்தன்
அருவினைகள் யாவும் அகற்றுமே சுவாமி — ப

1. ஆதியநாதியாய் ஜோதியாய் நிறைந்தாய்
அனுதினமுனதடியார்க் கருள் தந்தாய்
நீதி நேர்மையுடன் நீடூழி வாழ்ந்தாய்
நேசனே உந்தனை நானே பாசமாய்த் துதிசெய்தேனே ப

2. தேனது பாலுடன் சேர்ந்துமே ஓடும்
தேசமதிலே நன்றாய் வாழ்ந்திட நானும்
கோனே எந்தனைக்காத்திர் குறைவில்லாமலும்
கோரினேனுனையே நானே பாரிலே யாக்கோபுதானே. ப

யாக். வ-ம்- பரமரக்ஷகா எனது மூதாதைகளாகிய ஆபிரகாம் ஈசாக்கு என்பவர்களை எவ்விதம் ஆட்கொண்டனையோ அவ்விதமே அடியேனையும் காத்து ரக்ஷிக்க உனதுபாதாரவிந்தம் பணிகின்றேன்.

---

யாக்கோபு தாயார்.

பாலனை மதுரமொழி—என்ற மெட்டு.

பல்லவி.

ஏகதேவன் பெயரிட்ட இஸ்ரவேலன்-வேலன்-வேலன்
இந்த வேளை சிந்தை தனில்

என்னருமைப் புதல்வரை இங்ஙனம் சீலன்—சீலன்—சீலன்
எண்ணினேன் மண்ணிலன்பாக—பாலர்
இன்று சுகந்தெரிந்தேக—இங்கு
நண்ணினேன் இவிடமாக—
ஜயமாக துயர்போக நானிலம்—மாநிலம்
நல்வினை வகைஅறிந்திடவே வந்தேன்—வந்தேன்—வந்தேன்

யாக். வ-ம். நான் இத்தேசத்தில் தேவகடாக்ஷத்தால் பன்னிரு புத்திரரைப்பெற்று யாக்கோபு என்னும் பெயரையுற்று பாலும் தேனும் ஓடும் செழிப்புற்ற கானானில்பாரிக்குடும்பஸ்தனாக வாழ்ந்து வருபவன் இன்று எனது புத்திரர் சுகசேதி விசாரிக்க இங்குற்றேன்

யாக்கோபு—சபைவணக்கம்.

என்ன ரூபலாவண்யம்—என்ற மெட்டு.

பல்லவி.

வந்தனமும் தந்தேன் வந்திடுஞ் சபையோர்க்கெந்தன்
மைந்தனுன் மனமகிழ்ந்தே சிந்தையுடனே நிகழ்ந்தே. (வ)

1. தேசமாளும் ஜார்ஜ்ராஜன் திருவடிக்கென் வந்தனம்
பாசமுடன் என்னை ஈன்ற அன்னையார்க்கும் வந்தனம்
வாசமுடன் நேசர்கட்கும் ஆசையுடன்—இத்தினம்
மாசில்லாத யேசுதுரைராஜனே—நிலம்
காசினியிலேபண்பாய் தொழுதேனே—நல்
ஜோதிமுத்துத்தாசற்கு நான்—சிஷனே.

தண்டமிழ்விழங்கும் எண்டிசையிலங்கும்
தொண்டனுமே இங்கும் துதித்தேன் சபையோர்க்கேநன்கும் (வ)

யாக். வ-ம். இங்குற்ற சபையோர் யாவருக்கும் என் தாழ்மையான வந்தனம்.

யாக். வ-ம். ஆரடா சேவகன் எனது மைந்தரனைவரையும் அழைத்து வருவாய்.

சேவகன்: வ-ம். அப்படியே அழைத்துவருகின்றேன்.

## ரூபனும் அவனுடன் சகோதரர்கள் வருதல்.

*சாமிசிவா காணந்தா—என்ற மெட்டு*

### பல்லவி.

தந்தையேவந்தனமே உந்தன் தனையர்கள் தாமே
தழைத்திட அம்புவிலேத்திட இன்று
அழைத்ததினால் அணைகுவீர் நன்று (த)

சிந்தையுடனே வந்தனம் தானே
சிறுவர்கள் செய்திட்டோமே
அருமையாய் வணங்கிட்டோமே. (த)

ரூப. வ-ம். தந்தையே! மைந்தர்கள் மனமகிழுடன் வந்தனம் செய்கின்றோம்.

யாக். பல்லவி *கந்தா குகாமுருகா என்றமெட்டு*

1. எந்தனருமைமக்களே என்னருகிலே இன்பமாய்வந்திடும்
இவ்வேளை தனில் அன்புடனமர்ந்திடும்;

2 சிந்தைதனில் நினைத்தே அழைத்தேன் மைந்தர்
மேய்த்தும மைந்தர் நீங்களே—சுகசெய்தி
வழுத்திடுவீர்களே.

யாக். வ-ம் எனது அருமைப்புதல்வர்களே! இந்த இடத்தில் உட்காருவீர்கள்.

சகோதரர். வ-ம். தந்தையே! அவ்விதமே அமர்கின்றோம்

யாக். வ-ம் புத்திரசிரேஸ்டனுகிய ரூபனே உன்னிடம் சில கேள்விகள் கேட்க எண்ணமுற்றேன் உன் இச்சையாது.

ரூப வ-ம். தந்தையே அதற்கு பதிலுரைக்கத் தயாராயிருக்கின்றேன்.

*கண்ணிபமுள்ள மாதர்சுகம்மாறு—என்றமெட்டு*

தேசவிசாரணை — யாக். பல்லவி

புத்திரனேமுத்தகுமாரனே நற்புத்தியில்சிறந்திடும் ரூபனே
இந்தப்பூதலத்தில்மாதம்மும்மாரியே—பெய்து
புகழுடன் வாழ்வதைதக்கூர்வாயே— (பு)

வ-ம். அருமைப் புத்திரனானரூபனே நாம்வசிக்கும் இக்கானான் தேசத்தில மாதம்மூன்று மழைபெய்து அதால்செந்நெல்கள் செழித்துக்குடிகள் சிறப்புடன் வாழ்கின்றார்களா?

ரூபன்-பல்லவி. ஷெடி வர்ணமெட்டு.

1 தந்தையே நம்நாடுதனி லெங்கும்—மாதம்தானே மாரிமூன்று
தாம பெய்தும்—இங்கு
சகலரும் வாழ்கின்றாரே நன்கும்--தேவ
தயவினாலே நன்மை எங்கும் (தந்)

ரூ. வ-ம. தந்தையே நம்நாட்டில் திங்கள்மும்மாரி எங்கிலும் பொழிந்து சிறப்புடன் வாழ்ந்துகுடிகள் இருக்கின்றார்கள்:

கண்ணியமுள்ளமாந்தர் சுகம்மாரா—என்றமெட்டு.

பல்லவி.

மந்தைதனை மேய்க்கும்மைந்தர்களே—நம்
மந்தையின் விஷயம கூர்வீர்களே—அந்த
மாவனத்திலே ஆடுகளோடி புல்லை வாகுடனருந்தியேதான்கூடி

யாக். வ-ம் அருமைப்புதல்வர்களே நம்மந்தை காட்டிலுள்ள நல்ல புற்களைமேய்த்து ஒன்றுபத்து நூறுகபலுகி பெருகி இருக்கின்றதா?

ரூபன். பல்லவி. ஷெடி மெட்டு.

ஆடுகளும் காடுதனிலோடி புல்லைஆவலுடன் மேய்ந்துதினந்தேடி
அவை அதிகமாய் விர்த்தியாகிக்கூடி அங்கே
அநேகமந்தையாகுதே நாடி

ரூ. வம். தந்தையே நம்மந்தைகள் வனத்தில் நல்ல புற்களைப் புசித்து திருப்தியடைந்து விர்த்தியாகியும் இருக்கின்றன.

யாக். வம். பாலர்காள் நீங்கள் எடுத்துரைத்த வார்த்தைகளால் மகிழ்வுற்றேன் ஆனால், இன்னுமோர் விஷயம் வெளியிடஉத்தேசித்தேன்.

ரூ. வம். பிதாவே அவ்விஷயத்தைநசிக்கிறோம் தெரிவிப்பீர்கள்.

யாக். வ-ம் பாலர்காள் நீங்கள் பத்துப்பேரும் தேவகட்டளையைமீறி நடக்கிறதாக அறிந்து விசனமுற்றேன் அவ்விதப்பாவங்க

வீல் இனிதுணிந்நடப்பீர்களாகில் நம்குடும்பதிற்குத் தெய்வதண்டனை நிச்சயமாய் கேரிடும் ஆகையால் இனிமேல் சீராய்நடந்து கொள்ளுங்கள்.

ரூ. வ. தந்தையே நாங்கள் இதுவரையில் பலவிதத்திமைகளைக் கூசாதுசெய்தது வாஸ்தவம் இனி அவ்விதப்பாவங்களை நீக்கப் பிரயாசப்படுகின்றோம் பிதாவே.

யாக். வ. புத்திரர்காள் உங்கள் எல்லாரிலும் யோசேப்பு என்பவன் சகலநற்குணங்களில் சிறந்தவனுயிருக்கின்றமையால் அன்னவனுக்கு ஓர் பட்டுவர்ணச் சட்டைதைத்து வைத்திருக்கின்றேன் அவனை அழைத்து இதைத் தரித்துக்கொள்ளச் செய்கின்றேன்.

ரூபன். வ-ம். தந்தையே தங்கள் சித்தம்.

யாக். வ-ம். சேவகா சீக்கிரம் என் அருமைக்கண்மணியாகிய யோசேப்பை அழைத்து வருவாய்

சே. வ. ம். அப்படியே அழைத்து வருகின்றேன்.

---

யோசேப்பு சபைக்கு வருதல்.

ஷேமஞ்ஷர்ச்சாஜனமே—என்ற மெட்டு.

சபை வணக்கம்.

பல்லவி.

சபையோர்க்கென் வந்தன மேதினைபனுன் தந்தனமே
தாழ்மையாய் இத்தினமே

1. சாதுக்கள் யாவர்மனது மகிழ பூதலத்திலென்சிறமது தாழ
புகழுடனிக்கமர்ந்த நற்சபையோர்கட்கும்
புவிதனையாளும் ஐந்தாம் ஜார்ஜ் ராஜனுக்கும்
புனிதனுன் வந்தனம் யாவர்களுக்கும்
புரவலர் பாவலர் மாவலருக்கும் [சபை]

2 அன்னை தந்தை குரு நேசர்களுக்கும்
அன்புடன் வந்தனம் நேமியவர்க்கும்
அறமது தினம் மறவாது புரிவோருக்கும்
அகமகிழுடனென் குருவானவர்க்கும்
ஆசையாய் வந்தனம் செய்திட்டேனே
தாசன் யான் இத்தினம் கும்பிட்டேனே (ச)

யோ வம் கல்வி அறிவு தயை பொருமை நற்குண முதலிய சற்குணமமைந்த பெரியோருக்கும் இங்குநிற சபையோருக்கும் என் தாழ்மையான வந்தனம் அஃதுடன் எனது குருவாகிய A. ஜோதி முத்து உபாத்தியாயரவர்களுக்கும் என் வந்தனம்.

---

யோசேப்பு தந்தையை வணங்குதல்.

என்ன ரூப லாவண்யம்—என்ற மெட்டு.

பல்லவி

தந்தையே என்வந்தனம் தனயனுனே தந்தனம்
தாழ்மையுடனே உம்பாதம் வாழ்வில் மிருந்தோனே நிதம்
இந்த இடம் எந்தனை அழைத்த விபரந்தனை
சிந்தை மிக மகிழ்ந்துமே செப்பிடுவீரே தானே
உந்தனையே மைந்தன் மனமுகந்து பணிந்தேனே
கந்தமலிகின்ற புஸ்பம் தூவியே—நின் தன்
கழலினை பணிந்தேனின்றுமேவியே—என்னை
விந்தையாகவேவளர்த்திர் தந்தையே
விசேஷமாயன்பாகப் பாசமுடனுக
காசினிலனேக காருண்யம் வைத்தீரே பண்பாக. த

யோ வம் தந்தையே தங்கள் பாதாரவிந்தம் நமஸ்கரிக்கின்றேன் அடியேனை அழைத்தவிபரம் கூறுவீர்.

பல்லவி. தண்டபாணி தண்டபாணி என்றமெட்டு.

கண்மணியே கண்மணியே எந்தன்
காதல்மிகுத்தவல்ல பூதலந்தில் நற்—கண்மணியே.

தொகையறு.

கற்பகமே உயர்ந்தஅற்புதமே நிறைந்திலங்கும்
என் காதலிராகேல் பெற்றகளஞ்சியமே (க)

2. சற்குணனே—சற்குணனே—உந்தன்
தந்தை என் மடிமீதில்வந்துட்கார்வாய்—சற்கு

தொகையறு.

சகலநற்குணங்களுலும் சிறந்ததனயனே இந்நாளிலும்
நல்ல—சட்டைஒன்று நான்தருவேன் (சற்)

யாக் வ-ம் பாலகா உனக்கு ஓர் பட்டுவர்ண சட்டை தைத்து வைத்திருக்கின்றேன் அதை நீ இப்போது தரித்துக்கொள்வாய் கண்மணி. நீ சகல நற்குணங்களிலும் சிறந்தவனாக இருக்கின்றமையால் இதைக்கொடுக்கின்றேன்பாலா.

யோ. வ-ம் தந்தையே! தாங்கள் கொடுத்த பலவர்ண அங்கியைத் தரித்துக்கொண்டேன்.

யெடி வ-ம் தந்தையே தங்களிடம் ஓர் விஷயம் வெளியிட எண்ணுகிறேன்

யாக். வ-ம் பாலகா அவ்விஷயந்தை சந்தோஷமாய் என்னிடம் கூறிவாய்.

யோ. விருத்தம்.

தந்தையே இரவில் தூங்கும்கருணத்தில் கனவுகண்டேன்
எந்தனின்மனதிலேயே இயல்புடன்கண்ட தோற்றம்
சிந்தையும் கலங்குதையோ செப்புவேன்விபரமாக
மைந்தனென் தெரிந்துகொள்ள வகையுடனருள் செய்வீரே.

---

நொண்டிச்சிந்து.

1. இன்றிரவிலென் தந்தையே—மஞ்ச
மீதிலே தூங்கும் சமையம் கண்டேன் விந்தையே
சொற்பனம் கண்டெழுந்தேனே—அதைச்
சொல்லுவேன் விபரமதாய் நல்லதைத்தானே

2. அண்ணமாருடனேன் சென்று—வயலில்
அருத்தோமே நெல் கதிரை அன்புடனின்றே
பன்னிரு கட்டுகளாக—கட்டி
பாங்குடனே வைத்திருந்தோம் பாரின் மீதிலே

3. தென்றல் ஒன்றடித்திடவே—அங்கு
திட்டமுடனண்ணமார் கட்டவிழ்ந்திடவே
மட்டில்லாத என்கட்டையே—அரிகள்
வாகுடனே வந்தென்கட்டை வணங்கிடவே.

4. கண்டேனே கனவுதனை—நானே
காரணந்தெரியாமலே தவிக்கின்றேனே
விண்டிடுவீரே தந்தையே—மைந்தன்
விபரமாய் அறிகுவேன் மிகவிந்தையே

5. பின்னும் ஓர் சொற்பனங் கூர்வேன்—நீரும்
பிரியமுடனறிந்து உரைசெய்திடும்
தினம் தினம் உதயமாகும்—பகலோன்
சேர்ந்துதிங்களுடன் வந்துபோந்தவே என்முன்

6. பதினோர் நக்ஷத்திரங்களும்—வந்து
பாலன் என் காலில் விழுந்து பாதம் பணிந்தே
துதித்திடவே நான் கண்டேனே—அந்த
தூய்ய தேவனின் கிருபையாலே நான் தானே

7. என்னவிதமென்றெனக்கே—நீரும்
எடுத்துரைத்திடுவீரே மைந்தன் தனக்கே

யோ. வ-ம. தந்தையே கவனித்தீர்களா இவ்விதமான கனவைக் கண்டு மனத்திகில் கொண்டு தங்களிடம் விண்டேன் பிதாவே.

யாக் பல்லவி கனவுகண்டதினாலே —என்ற மெட்டு

1. கனவுகண்டதினாலே பாலா கவலைகொள்ளாயின்றே பாலா
2. மனமதில்பயங்கொள்ளாய்நீயும்வருத்தம் வைத்திடாய் பிள்ளாய்
3. தந்தைநானே உன் கனவைவிஸ்தரிப்பேனே அந்நிலைவைபாலா

யாக். வ-ம். பாலா நீ கண்ட கனவானது யாவருக்கும் விசனத்தைத்தரத்தக்கதாயிருக்கின்றன இரண்டு சொற்பனமும் ஒரே அர்த்தமுள்ளது தான் அதில் சூரியன் நான் சந்திரன் உன் தாய் பதினொரு நக்ஷத்திரங்களும் உன் சகோதரரைக்குறிக்கும் இத்தனை பேரும் உனது பாதாரவிந்தம் பணிவோம் என்பது அதின் பொருளாகின்றன பாலா இக்கனா தெய்வக்காக்ஷியால் கண்டு தெரிவித்தாய் இதற்காக நீ வருத்தமடையாதே என் செய்யலாம் யாவும் தெய்வச் செயல்

யோ வ-ம். தந்தையே நான் கர்த்தாவின் சித்தத்தால் இவ்வித சொற்பனங்கண்டு அறிவித்தேன் அதற்காக என் பேரில் விசனமுற வேண்டாம்.

சிமியோன் வ-ம் சகோதரர்களே கவனித்தீர்களா சிறுவன் கண்டுசொன்ன சொற்பனமும் தந்தை அவனை நடத்திய போக்கும் எவ்விதம் இருக்கின்றன. இருக்கட்டும் இச்சிறுவனை நம்தந்தைகாணாத சமையத்தில் கொலை செய்து விடுவதே நலம். அல்லது நமக்கு தந்தைமுன் மதிப்பு இல்லை.

சகோதரர் வ-ம் அப்படியே செய்வோம்

ரூபன் வ-ம் தந்தையே தங்களிடம் ஓர் விஷயம் தெரிவிக்க எண்ணினேம். அதாவது நம் ஆடுகள் மேய்ச்சல் காணாது தற்சமையம் மெலிகின்றன. வேறு இடம் ஏதாவது தெரியுமானால் எங்களுக்கு அறிவிப்பீர்.

யாக்— வ. ம். புத்திரர்களே. சிகேம் என்ற இடத்தில் மிகுந்தபுல் பயிர்இருக்கிற தென்றறிந்தேன அச்சேகம் மந்தைகளை ஓட்டிச்சென்று மேய்த்துவாருங்கள்.
ரூ. வ. ம். அப்படியே செய்கின்றோம்.

## ஆடுமேய்த்திட ஏகுதல்,

வாகலியுகவரதா —என்ற மெட்டு.

ரூபன் பல்லவி.

ஆடுகள் மேய்க்க வாரீர் அடவிதனில்
அன்புடனே தம்பிமார்களேபண்புடனே— (ஆ)

1. காடுதனிலே ஆடனைத் நாளே.
கடுகவே மூடுகிச்செல்வோம் கானில்மேய்த்திட (ஆ)

2. தந்தை உரைப்படி தட்டாமல்அப்படி
சல்தியாய்ச் சிகமேசெல்வோம் தம்பிமார்களே

ரூ. வ. ம். தம்பிமார்களே நம்தந்தையின் வார்த்தை பிசகாமல் சிகேம் என்றஇடம் சீக்கிரம் ஆடுகளை மேய்க்கஏகுவோம்

சகோதரர் வ. ம. அப்படியே செல்வோம் அண்ணா

யாக்கோபு யோசேப்பை வனத்திற்கு அனுப்புதல்

யாக். வ. ம். அடே சேவகா என துமைந்தன் யோசேப்பை தருவிப்பாய்

சே. வ. ம். அப்படியே அழைத்துவருகின்றேன்

யோ. வ. ம. தந்தையே மைந்தனுன் சரணம் செய்கிறேன் அழைத்தவிஷயம் கூர்வீர்

கவரோசி தாதாபாய்—என்ற மெட்டு.

யாக் பல்லவி.

கண்மணி எந்தனின் கண்மணி காதலாக வேபூதலத்திலென் (க)

1. கான கந்தனில் தானேபோன உனதன்னரை
காணுகதா லேகவலைகொள் கிறேன்
ஆனதா லேநீ அறிந்துவா நல்ல கண்மணி

2. வனமதிலேகிப என் மைந்தானேவரையும்
வரக்காணுததால் வருத்தங்கொண்டேனே
உருக்கமுடனே ஓடிநீதானே கண்மணி

3. சீக்கிரம் அவர்கள்சுக செய்தியறிவாயாக
தீர்க்கமதாக சீகேமதேச பார்க்குள்ளேபரிவாசப் போவாயே க

யாக். வ ம். ஆசைப்பாலா இன்றுதினம் வனம் போய் உனது அண்ணமார்களின் சுகசேதியை அறிந்துவருவாய்

யோ. வ. ம். அன்புமிகுந்த தந்தையே அடியேன் தடையின்றி வனம்சென்று அண்ணமாரைப் பார்த்துத் திரும்புகின்றேன்

பஹாரியாலா—என்ற மெட்டு.

யாக் பல்லவி

போய்வருவாயே எந்தன் புத்திரனே
காவுதனி லேகியே என்கண்மணியான
ஆவலாய் ஆடுமேய்க்குமுன் னண்ணரைத்தானே
நீயும் பார்க்கவும்தானே—போய்

வ. ம். பாலகா சீக்கிரம் சென்று திரும்புவாய்
யோ. வ. ம். தந்தையே உடனே இதோபுரப்பட்டுவிட்டேன்

## யோசேப்பு அண்ணரை காட்டில் தேடுதல்

காம்சந்திர மோகன தாஸ்—என்ற மெட்டு.

யோ. பல்லவி

சீகேம் சென்ற அண்ணரை நான்தேட
தினமேகியே மனமாகவே குணமாகஇவ்வன வீதினில் (தே)

1. மாதா பிதாவின் உரையைத் தீதில்லாதபடியே
மைந்தனான் மீறாமலே வருகிறேனான்தேடியே
வாகாய்ஓடியே அண்ணர்வசிப்பைநாடியே
மனம்வாடியே வழிகூடியே முனமேநானுமுகம்வாடியே (தே)

2. காட்டிலேசென்ற அண்ணரைக்காணவே செல்கின்றேனே
கருத்துடனெனது தந்தைவழுத்துமொழி போல்நானே
சாவிலேதானே அண்ணர்களைப் பார்க்கத்தானே
சதி நாதனே துதிசெய்தேனே இதுவேளையிலேவா கோனே தே

யோ. வ;ம். எனது அண்ணமார்கள்வனத்தில்சென்று ஆடுமேய்க்கப்போனவர்கள் இரண்டு மூன்று நாட்களாகக் காணாததால் இன்று தினத்தில் எனதுதந்தையின் கட்டளைப்படி அண்ணரைத்தேடி ஆரண்யம்செல்கின்றேன்.

## பொது வசனம்.

### தெய்வாதீனத்தால் காவலன் தோற்றம்.

காவலன் வ-ம். ஆரவன் இவ்வனத்தில் பயமின்றித்திரிகின்றனையே சீக்கிரம் உன் விருத்தாந்தம் என்னிடம் தெரிவிப்பாய்.

யோ. வ-ம் ஐயா தாங்களார்?

கா. வ-ம் நான் இவ்வனத்திற்கு காவலன்.

யோ. வ-ம் ஐயா நான் கானான் தேசம் எனதுதந்தையின்பெயர் யாக்கோபு என்னோடு பிறந்தவர்கள் பதினோர் பேர் பத்துப்பேர் வனத்தில் ஆடு மேய்க்கிறார்கள். அன்னவர்களை இவ் வனத்தில்தேடி அலைகின்றேன். தாங்கள் பார்த்திருந்தால் கூறுவீர்.

கா. வ-ம் சரி சரி உனது அண்ணமார்கள் தோத்தான் என்ற இடம் போய் ஆடு மேய்க்கிறார்கள். அங்கே போனால் உன் அண்ணரைப்பார்க்கலாம்.

யோ. வ-ம். அப்படியா மிகவும் சந்தோஷம் உடனே போய்ப் பார்க்கின்றேன்.

பாதி மதி யணி என்ற மெட்டு

போ. பல்லவி.

1. அண்ணமாரைத்தேடி நன்னயமாய் ஓடி ஆரண்யந்தனில்
தேடி அலைந்தேனே — எந்தன்
எண்ணம் பலவிதமாகிப் புலம்பியே கண்ணீர் கலங்கியே
அழுதேனே

2. ஆவி வருந்தியே மேவி அடவியே
தாவித்தேடி இத்தினம் நானே — இந்தக்
காவுதனில் மந்தை மேய்க்கும் அண்ணர் அந்தோ
இருக்குமிடமதை அறிந்தேனே.

வ-ம் நான் வெகு நேரமாய் அண்ணரைத்தேடிக்கவலை யுற்றேன் தெய்வ கிருபையால் அதோ அண்ணர்களைப்பார்த்து மகிழ்ச்சி கொண்டேன்.

யோ. அண்ணரைவணங்குதல்

திரிலோகமும் புகழும் சுந்தர—என்ற மெட்டு.

பல்லவி.

1. அண்ணரே அன்புடனே வந்தனம்
ஆவலுடனே தந்தனம்
அன்னை பிதா என்னை நன்னயமாய்த்தானே
அனுப்பிட வந்தேனே ஆசை யுடன் நானே

2. அண்ணமாருங்களின் சுக செய்தி அ.
அறிந்திடவே வந்தேனே
அன்புடனே பலகார வகை கொண்டே
ஆவலுடன் வந்தேன் காவுதனில் நொந்தேன் அ.

யோ வ-ம் அண்ணமார்களே தம்பி வந்தனம் செய்கின்றேன் தந்தை என்னை உங்கள் சுகசேதியறிய அனுப்பினார்.

யோ. விருத்தம்.

தந்தை சொற்படி மீறாமல் தார் வனந்தனிலே சென்று
அந்தரமான காட்டில் அண்ணர் போயிருக்கும் நாட்டில்
விந்தையாய் மந்தை மேய்க்கும் மேய்ப்பர் என் அண்ணர்சேதி
சிந்தையாய் வனத்திலே சித்திரமாய்ப்பார்க்கப்போறேன்

உடுமலைமுத்துச்சாமிபாட்டை—என்ற மெட்டு.

யோ. பல்லவி.

1. ஆரணியத்திலண்ணனை நான் தேடி—இங்கு
அலைகிறேன் மனமிகவாடி—இந்த
ஆருமரியாவனத்தில் தேறுதலில்லாது—நத்தி
னேனே அலைந்தேனே

2. பாமிருக மிருந்த காடே—இதில்
பாலன் வருகின்றேன் வனம்வீடே—தேவா
பாவி யெனையே கண் பார்த்தே ஆவலுடனுகைகாத்தே
[சேர்ப்பாய் நன்மை ஏற்பாய்.

3. எந்த இடந்தன்னிலண்ணாடு—மெய்த்து
இருக்கின்றார்களோமலை நாடு—நானே
எப்படி அறிந்திடுவேன் ஒப்புடன்சிகேம்தெரிவேன்
போவேன் எகிடுவேன்.

யோ வ-ம். எனது அண்ணமார்களைப்பல இடமும் தேடிக்கவலையுடன் இவ்வனத்தில் அலைகின்றேன். எந்த இடத்தில் அண்ணர் இருக்கின்றார்களோ அறியேன்.

காந்தி மஹான் போலுண்டோ—என்ற மெட்டு.

யோ. பல்லவி

அண்ணரைதேடி அலைந்தோடி நண்ணிவந்தேனே—கானில்
எண்ணி நொந்தேனே
திண்ணமதாக தீவிரமாக
தேடிவந்தேன் இக்காளே-வழி கூடி வந்தேன் இக்காலே
நானினிதுவேனோ தனியாளே காணுதாலே—மிகத்
தியங்கினேன் மனந்தாழ-நல்ல சிறுவன் எந்தனையாழ
வாரும் தேவா தேவா முன்னாலே-நான்
திரமுடனே கானிலே போய் வந்திடவே வந்திடும்
சிறுவன் மனம் பதறி இந்த வனந்திரிகின்றலை கின்றேனே-அ

வ-ம். நான் எனது அண்ணமாரை இவ் வனமெல்லாம் தேடியும் காணேமே ஜெகதீசா நான் சீக்கிரம் கண்டு கொள்ள அருள் புரிவாய் ஈசா.

சகோதரர் வர்மித்கல்.

தாஸராஜு தாஸராஜ அடல ராஜ ஹோ — என்ற மெட்டு:

சிமியோன் — பல்லவி.

உந்தனின் வந்தனம் எங்கட்குதவாது போடா — நீயும்
சிந்தை மகிழ்ந்து இவ்வனத்தனில் வந்து சேவித்தாய் நொந்தே
உந்தனின் கனவின் உண்மையின் முழுவதும் எந்தவித முடியும்
தந்தையுடன் சகோதரர்களும் வெகுந்திட விந்தையுடன் சொன்னாய்;
தருணமே உந்தனை கருவறுத்திடுவோமே
தார்வனத்தனில் தாமே தா தா

வ-ம் போடாதுஸ்டன்முன் அன்னைதந்தையிடம் நீ சொன்ன சொற்பனத்தை நினைவுகூர்ந்தோம் உன்னை சின்னபின்னமாக்க நினைத்திருக்கின்றோம் உன் நமஸ்காரம் அவசியமில்லை அடேவாங்கடா இவனைப் பிடித்துக் கட்டி உதையுங்கள் இவனைநாம் வணங்குவோமென்று சொற்பனம் கண்டுரைத்த வனல்லவா.

வனத்தனிலே தனியதாக வந்தேனம்மா — என்ற மெட்டு.

யோ. பல்லவி

1. அண்ணரே என்னையேனிந்த அவதி செய்கிறீர்
ஆவிசோருதே யென்செய்வேன் அடிக்காதீர் உய்வேன்

2, வனத்தனிலே மனம்பதறி வந்தபாலனுன்
வாட்டியே அடிக்கவேண்டாம் வந்தனம் தந்தேன்

3. குற்றமென்ன செய்திட்டேனோ கூறுவீர் அண்ணா
குழந்தையெனை கோபிக்காதீர் கும்பிட்டேன் இன்னாள்.

யோ. வ-ம். அண்ணமார்களே இரக்கமில்லாது இவ்வேதனை செய்வது நீதமா நான் என்னபாதகம் செய்தேன்

சிமியோன் வ-ம்: நீ எத்தனையாகக் கெஞ்சியபோதிலும் நெஞ்சமிரங்காது வஞ்சனை செய்வது நிக்ஷயம்.

யோ. விருத்தம்.

அண்ணரே அண்ணமாரே ஆரண்யந்தனில் என்னைத்
திண்ணமாய்க் கட்டிநீங்கள் செய்கிற துன்பந்தன்னை
என்னமாய்ச் சகிப்பேனையோ இவ்விதக் கர்வம் வேண்டாம்
மண்ணிலே மைந்தனுனே வணங்கினேன் காக்குவித்தே,

கர்ணகைமடிந்தா ளென்று—என்ற மெட்டு.

யோ. பல்லவி.

1. பாரவனமீதி லண்ணா பாலன் செய்குற்றமே தண்ணா
கோரமே செய்யாதீர் இன்னாள் கேவென அழுதேன அண்ணா
2. சங்கடமே செய்கின்றீரே பங்கப்படுத்தி வைதீரே
அங்கமே நொந்தழுதேன் பாரே அடிக்காதீர் அண்ணமாரே

யோ. வ-ம். அண்ணமார்களே சிறுவனென்று கவனியாது குரூரதண்டனை விதிக்கின்றீர்களே என்மெல்லியதிரேகம் பொருக்குதில்லையே யென்செய்குவேன்.

சந்தோஷம் சண்முகன் சன்னதி—என்ற மெட்டு.

சிமியோன் - பல்லவி.

போடா போடா புரத்தனிலோடிபோ நீ போடா போடா
போக்கிரிப் பயலாக்கி வைத்தாயே தீர்க்கமாய்த் தந்தை
முனனுகனிலே

கரங்குவித்து வந்தனம் காதலுடன் செய்தாய்
கனவுதனையேகண்டு கவலைப்பட உய்தாய்

திரமுடனுனையின்று திமை செய்குவதாய்
தின்னமுடனேஎண்ணினோம் அண்ணமார்களே நண்ணினோம்

சகோதரர். வ-ம். அடாசிறுபயலே உனக்கு அவ்வளவு கர்வமா உன்னைசின்னப்படுத்தாமல் விடோம் நீ கண்டசொற்பனக்காக்ஷியை பின்னால் பார்க்கலாம்.

யே. வ-ம். அண்ணமார்களே நான் தெய்வாதீனமாய்க்கண்ட சொற்பனத்தால் வர்மம் வேண்டாம்.

ரூப வ-ம் தம்பிமார்களே நம்தம்பி யோசேப்பைப் பலவித உபத்திரவம் நம்கோபத்திற் கேற்றபடி செய்து விட்டோம் ஆனால் நாம் நினைத்தபடி கொலைசெய்வோமானால் பழிபாவம் நம்மைத்தொடரும் ஆகையால் அவனை இந்த பாழ்ங்கிணற்றில் தள்ளிவிடுவோமானால் தானாகவே இறந்துபோவான் இப்படிச்செய்ய உங்கள் நோக்கம் என்ன.

சிமியோன், வ-ம். அப்படியே செய்வோம் அண்ணா.

117308

ஷெ. வ-ம். வாங்கடா, பிடிங்கடா, கட்டுங்கடா தம்பியைக் கிணற்றில் தள்ளுங்கடா.

யோ. வ-ம். அண்ணா இஃதென்னமோசமாயிருக்கிறது. இப்பாழுங்கிணற்றில் போட்டுவிட்டால் நான் எவ்விதம் பிழைப்பேன் என் தந்தையை எவ்விதம் காண்பேன் உங்களைத் தஞ்சமாக நினைத்து வந்தேனே அண்ணா

### யோசேப்பு கிணற்றில் போட்டபின் புலம்பல்.

உடுமலை முத்துச்சாமி—என்ற மெட்டு.

பல்லவி.

ஆழமுள்ள பாழ்ங்கிணற்றில் போட்டு—விட்டு
அண்ணர்களுமே கொரேமீட்டு—விட
ஆறுமில்லையாதலினால் சோருதே துயரத்தினால்
சோகம் ஆனேன் வேகம்

2. காலையும் கையையும் சேர்த்துக்கட்டி—என்னைக்
கஷ்டமடையும் படியாய்த்திட்டி—பெருங்
காவனத்தில் பாழ்க்கிணற்றிலே விழுந்திறந்திடவே
செய்தார் அண்ணர் உய்தார்

யோ. வ-ம் எனது அண்ணமார்கள் இரக்கமில்லாது சிறுவனைப் பாழுங்கிணற்றில் தள்ளிவிட்டு ஏகினார்களே இனி என் செய்வேன்.

செந்திக்குமாரவேலுண்டும்—என்ற மெட்டு

பல்லவி

1. பானே வரந்தந் தாளுவாய் பாலனை அன்பாய் ப
பரிசுத்த தேவனே தரிசித்தேன் வேதனே
கரிசித்து எந்தனைக் காத்திடும் நீதனே ப

2 இத்தருணத்தில் வந்திடும் ஏழை முன் நீரும்— இ
இருகரம் குவித்துமே தரிசித்தேன் நானுமே
அருவினைகளையுமே அகற்றிட வாருமே— இ

3. பாழுங்கிணற்றில் தள்ளியே பாலன் என்னையே பா
பாதகரான எம் சோதரர் பேதமாய்
நாதியில்லாத அனாதைபோலதாமே— பா

யோ வ-ம் எங்கும் நிறைந்திலங்கும் பராபர மூர்த்தியே ஏழை என்னைக்காக்க இவ்வேளை முன் வாரும் கண் பாரும் இப்பாழுங்கிணற் றிலிருந்து மீழ்வதற்கு அருள் தாரும், உன்னை நினைந்தழும் சிறு வனைக்காரும் உம்மைத் துதிக்கின்றேன் தேவா.

வஞ்சமில்லா தவளே—என்ற மெட்டு

யோ பல்லவி

1 தந்தை என்தனை முன்னே நல்ல சந்தோஷமாகத்தானே—இந்தத்
தால மீதிலே தனையனெனை அன்பாய் தற்காத்தாழ் பண்புடனே

2 என்ன செய்வேன் தேவா இந்தப்பாழுங்கிணற்றில் சூவர-வந்து
என்னையே ரக்ஷிப்பாய் உன்னையே நம்பினேன்
இவ்வேளைகாக்க வா வா— [த]

3 தற்பரனருளினால் யான் சொற்பனங்கண்டதினால்—என்தன்
சகோதரர்கள் மிகவே பொறாமையால் தள்ளினார்கள் கிணற்றில்

யோ வ-ம் எனது தந்தையானவர் அதிக பாசத்துடன்வளர்த்து வந்தனரே அன்னவரை நான் பாராது மாளும்படி ஏற்பட்டு விட்டதே அதிக கோரமாக கத்திய சத்தத்தால் நாவரட்சி காண்கின்றதே சீக்கி ரம் இறந்துபோவேன் ஈசா என்னை ரக்ஷித்தாள்வாய் நேசா,

பொது வ-ம் கர்த்தாவின் செபலரால் வியாபாரிகள் தோற்றம்,

தில்க்குசத்தா தியெஜமன்—என்ற மெட்டு

பல்லவி

1 வியாபாரிகள் விரைவுடனே வேகமாய்த்தானே
வேகமாய்த்தானே வெகு துரிதமாய்த்தானே

2 எகிப்து தேசம் சென்றிடவே இன்பமாகவே
இன்பமாகவே வழி ஏகிச்செல்லவே

3 முத்து நவரத்தினங்களை வாங்கி விற்பவர்
வாங்கி விற்பவர் பெரும் வனத்தில் வர்த்தகர்

வ-ம் நாங்கள் வர்த்தகர்கள் ரத்தின வியாபாரங்களையும் மற் றும் பிசின் தைலம் கந்த வர்க்கம் முதலிய பொருள்களையும் ஒரு தேசத்தில் வாங்கி மறு தேசத்தில் விற்பனை செய்யக்கூடியவர்கள் இப்போது எகிப்து தேசம் செல்லுகின்றோம். இவ்வனத்தில் வழி

தெரியாது திகைத்து நிற்கின்றோம்: ஆனால் அதோ ஆடுமேய்க்கும் இடையர்களிடம் வழி கேட்டறிகின்றோம்.

## வியாபாரிகள் வழி விசாரித்தல்.

குமரனையே பாடிக் கொண்டாடுவோம்நாமே—என்ற மெட்டு.

பல்லவி

ஆடுகளை மேய்க்கும் ஆட்டிடையர் நீங்களே
அன்புடனெகிப்தேக அறைகுவீர் வழிபண்பாக [ஆ]

காட்டிலே மேட்டின் மேலே தாஷ்டீகமாயிவ்வேளை
வாட்டமாய் வனத்திலே வழிதெரியாதலைகிறதாலே [ஆ]

வி வ-ம் ஐயா ஆடுமேய்க்கும் அன்பர்களே இவ் வனத்தில்வழி தெரியவில்லை தயவு கூர்ந்து பாதை காண்பிப்பீர்.

யூதா வ-ம் ஐயா தாங்களார் எந்த வூர் எங்கு செல்கின்றீர்.

வி. வ-ம் நாங்கள் வியாபாரிகள் மீதியான் தேசத்திலிருந்து எகிப்து செல்லுகின்றோம். வழிதெரியாமல் திகைத்துநிற்கின்றோம்.

யூதா வ ம் வியாபாரிகளே எங்களிடம் ஓர் சிறுவன் இருக்கிறான் அன்னவனை விலைக்கு வாங்கிக் கொள்ளுகின்றீர்களா.

வி வ-ம் ஐயா அப் பையனை வாங்கிக்கொள்கிறோம். ஆனால் என்ன விலை கூறுகின்றீர்கள்.

யூதா. வ-ம் வியாபாரிகளே நீங்கள் கொடுப்பதைப்பெற்றுக் கொள்வோம் உங்களுக்கு என்ன தெரியாதா?

வி. வ-ம் சரி: அப்படியானால் எங்களிடம் தற்சமையம் கையிலிருப்பது இருபதுவெள்ளிக் காசுதான் அதை நீங்கள் பெற்றுக் கொண்டு பையனை எங்களோடு அனுப்ப இஷ்டமானால் அப்படிச் செய்யுங்கள் அல்லது நாங்கள் செல்கின்றோம்.

யூத. வ-ம். சரி சரி விலையைக்கொடும் என் தம்பியை இழுத்துக்கொண்டு செல்லும் இவனை பணத்திற்காக விற்கவில்லை இவனின் பொல்லாத சொற்பனத்தினாலேயே விற்கிறோம.

## யோசேப்பு விற்றபின் புலம்பல்.

பாஹரியாலா—என்றமெட்டு.

பல்லவி.

1. என்னை விற்கலாமோ விலை கொள்ளலாமோ
வியாபாரிகள் விரைவுட னிருக்கின்றார்களே
நியாமில்லாமலே எந்தன் அண்ணமார்களே—விலை

2. சந்தசமுடன் சரணம் செய்திட்டேன்
தப்ப தந்திடும் இந்த வேளை சாமி நீங்களே
எக்கால மினி யெந்தனைக் காண்பீர் தாங்களே—விலை

வ. ம். அண்ணமார்களே தங்கள் பாதாரவிந்தம் கமலங்களிக் கின்றேன் கருணை கூர்ந்து என்னை வியாபாரிகளிடமிருந்து ரக்ஷிப்பீர்கள்.

யூத. வ. ம். தம்பி தம்பி இனி முடியாது பணத்தைவாங்கி முடித்து கொண்டோம் நீ அவர்கள் பின் போகவேண்டியதுதான் வியாபாரிகளே இரக்கம் பாராட்டாமல் இழுத்துச்செல்லுங்கள்

## ரூபன் தம்பியைத் தேடுதல்.

ரூபன். வ. ம். என் தம்பி யோசேப்பை தந்தையிடம் அனுப்ப உத்தேசித்து மற்றும் சகோதரர் கோபத்தை ஆற்ற அவர்களோடு சேர்ந்து அவனைப் பல உபத்திரவம்செய்து பின் காலையும் கையையும் கட்டி பாழுங்கிணற்றில் போட்டிருந்தேன் அன்னவனை மற்றத்தம்பி மார்களறியாத நேரததில் தந்தையிடம் அனுப்பிவைக்கப் போகின் றேன் கிணற்றில் பார்க்கிறேன்.

ரூப. வ. ம். ஐயோ இந்த ஆழமுள்ள பாழுங்கிணற்றில் தம்பி யோசேப்பைக் காணோமே. அவனை எடுத்தனுப்ப ஆவலுடன் வந் தேனே இனி யென்செய்வேன் ஈசா.

ஆசை மன்னவா—என்றமெட்டு.

ரூபன். பல்லவி.

1. இங்கு வந்த என்சிறு தம்பியைக்காணேன் இன்றுதான்
இப்பாழுங் கிணற்றிலிருந்து எடுத்திட
எண்ணியே வந்தேனே நண்ணியே நொந்தேனே.

2. தந்தை யென்னையே உந்தன் தம்பிதன்னையே அன்புடன்
சிந்தைதனில் நினைத்தெந்தனையே கேட்டால்
எந்தவிதமா யுரைத்திடுவேனோ நான் இங்.

யோ வ. ம். எனது அருமைத்தம்பி யோசேப்பை இக்கிணற்றிலிருந்து எடுத்துக்கட்டவிழ்த்து சுகமாய் தந்தையிடம்போய்ச்சேர அனுப்பலாம் என்றெண்ணி இங்கு வந்தேனே தம்பியைககாணோமே,

ரூபன் விருத்தம்.

சுந்தர அழகுவாய்ந்த சகுணனே உன்னையே நானே
இந்த நற்பாழுங்கிணற்றிலிருந் தெடுத்தனுப்ப வந்தேன்
உந்தனைக்காணாத லே ஓங்கியே அழுதேனே
தந்தை என்றனையே கேட்டால் சாற்றுதற்கென் செய்வேனே

கர்ணகை மடிந்தாளென்று—மெட்டு

ரூபன். பல்லவி.

1. தந்தை என்னிடமே வந்து உந்தன் தம்பி எங்கேயென்று
விந்தையுடனே தானின்று விபரமுடன் கேட்டால்விண்டு த

2. பன்னிருவரிலே உன்னை பாங்குடன் வளர்த்தார் தானே
பாரில் அழகானவனே பார்ப்பதெப்போ பாவிநானே

ரூபன். வ. ம். சுந்தரமுக ரூபலாவண்யனே உன்னைப்பற்றி தந்தை என்னிடம் கேட்டால் என்னவினவுவேன் ஐயோ தம்பி இனியென் செய்வேன் ஆனால் தம்பிமாரிடம் விசாரிக்கிறேன்.

ரூப வ. ம் அன்புற்ற தம்பிமார்களே! நம் தம்பி யோசேப்பை இப்பாழுங்கிணற்றில் போட்டு வைத்திருந்தோமே இப்போது தம்பியைக்காணோமே எங்கேயப்பா ?

யூதா. வ. ம்: அண்ணா நானும் மற்றுஞ்சகோதரர்களுமாகச் சேர்ந்து இவ்வழியாகவந்த வியாபாரிகளுக்கு விலைசெய்துவிட்டோம்.

ரூபன். வ. ம் தம்பிமார்களே நம் தம்பி யோசேப்பை விலை செய்து விட்டீர்களா? இவ்விதம் செய்வது தகுதியல்லவே மேலும் அந்த ஈசன் செயலின்படி நடந்துவிட்டது இருக்கட்டும் ஆனால் நம் தந்தை இவ்விஷயத்தை யறிந்தால் நம்மைச் சபித்துப்போடுவார் ஆகையால் நம் தந்தை தம்பியைவிசாரிக்கும் சமையம் காட்டிவிருந்து நாங்கள் திரும்பும்போது இந்த அங்கியைத் தம்பியின் அங்கியென் றறிந்தெடுத்து அவன் தனியாய் வந்த இடத்தில் ஏதோ மிருகம் கொன்றிருக்கின்றன வென்று விசனமுற்றழுது பின் தங்களிடம் இது விஷயத்தைவெளியிடுகின்றோம் என்றுயாவரும்தெரிவியுங்கள்.

சகோதரர் வ ம். அப்படியே நெரிவிக்கின்றோம் அண்ணா ஆனால் மிருகங்கள் கொன்றிருந்தால் சட்டையில் இரத்தம்படவில்லை யென்று நம் தந்தை கவனித்தால் யென்செய்யலாம்

ரூபன். வ. ம். அப்படி நினைய்ச்சபடிக்கு ஓர்ஆட்டுக்குட்டியை அறுத்து அதன் இரத்தத்தில் இந்த அங்கியைத்தூவட்டி காட்டி விட்வேண்டியது தம்பிமார்களோ அதுதான் நல்ல யோசனை

சிமியோன் வ. ம். அப்படியே செய்வோம்.

யாக்கோபு தனது புதல்வர் வரவைக்காணாது புலம்பல்

வீடுகடந்து வெளியே நடக்கையில்—என்றமெட்டு.

யாக். பல்லவி.

1. வனமதில் சென்றதோர் மகனை இன்னும்
வரவுமே நான் காணேனே
என்னமாயமோ நானறிகிலேனே என்செய்வேன்
மைந்தரைக் காணோமே — வ

2. பாரமிருகமடர்ந்திடுங் காட்டிலேபாலனுஞ்சென்றானே-என்ன
கோரமோ மாலை நேரமாகியே இன்னும்
குழந்தையைக் காணோமே — வ

யாக். வ. ம் எனது அருமைப்புதல்வர்கள் வனத்தில் ஆடு மேய்க்கப்போய் இரண்டு மூன்று நாட்களாகக் காணாததால் அவர்களின் சுகசேகியை அறிந்துவர ஆசை மகன் யோசேப்பை அனுப்பிவைத்தேன் அந்தி நேரமாகியும் எந்தன் பாலகர்களைக்காணோமே என்னென்ன விபரீதம்காட்டில் நடந்ததோ அறிகிலேனே தேவா

செந்தூர் வாழ்ந்திடுக்குமரா என்ற மெட்டு

யாக். பல்லவி

சற்குண மிகும்பாலனே—உங்கள்
தம்பிதனையே காணேன் அம்புவியிலே நானே— ச

அற்புதமாகவே ஆரணியமேகவே
அனுப்பியே வைத்தேனே அன்புடனாகவே
இப்போதுங்களுடனே சேப்பையுங் காணோமே
ஏங்கி வாடினேன் திக்கில்லா நானே
பாக்குடனெடுத்துரைப்பீர்— ச

யாக் வ. ம். பாலகர்காள் நீங்கள் யாவரும் திரும்பி வீடு வந்து சேர்ந்தீர்களே உங்கள் தம்பி யோசேப்பை எங்கேயப்பா காணோமே.

ரூபன் வ ம். தந்தையே நாங்கள் இன்றுமாலை திரும்பும் சமையம் இந்த அங்கி தம்பியினுடையது என்றெடுத்து அவன் தனியாய் வந்த இடத்தில் ஏதோ ஓர் துஷ்டமிருகம் அடித்துக் கொன்று புசித்திருக்கிறதென்றறிந்து அதிக விசனமுற்றழுது துக்கித்து தங்களிடம் தெரிவிக்க அவனுடன் ஓடிவந்தோம் தந்தையே.

யாக். வ. ம். ஐயையோ இனிநான் யென்செய்வேன் அழகு மிகுந்த பாலா நீ மாண்டனையே எப்போது பார்ப்பேன் பாலா.

யா. விருத்தம்.

வனமதில் சென்ற பாலா மடிந்துயிர் விடுத்தாய் சீலா
மனமதில் நினைக்கக் கண்ணீர் மாலைபாய்ப் பெருகுதையோ
கனவெல்லாம் கழிந்து போச்சே கற்பகமணியே பாலா
இனி யென்னசெய்வேன் நானும் இறந்திடாதிருக்கலாமோ.

ஐயோ என் ஜானகி — என்றமெட்டு

யாக். பல்லவி

1. ஐயோ மகனே பாலா அருந்தவத்துற்ற சீலா
ஆரண்யந்தன்னில் மாண்டாயோ — என் பாலகா

2. உன்னையே நான் மறந்து உலகில் தனித்திருந்து
உயிருடன் வாழலாகுமோ — என்பாலகா

யா வ-ம். ஆசைக்கண்மணி நீ என்னை மறந்து உயிர் துறந்தனையே இனி உன்னை எவ்விதம் காண்பேன் சந்திரனைப்பழிக்கும் உன் சுந்தர முகத்தை எந்நாளில் பார்ப்பேன் ஐயோ இறந்தனையே.

தெய்வத்திருவுளமேனன்செய்குவேன் — என்ற மெட்டு

யாக் பல்லவி.

1. மகனே மகனே நீயும் மாண்டனையோ
மாவனந்தனில் தனியாய் மாமிருகத்தி னிரையாய
தினந்தனிலேகினையோ — சீலனே — மகனே

2. அழகு மிகுந்த எந்தன் கண்மணியே
ஆசை மிகும் பாலகனே ஆரண்யந்தனில் சிலனே
நீச மிருகங்களால் மடிந்தாயே— மகனே

3 பெற்ற வயறு தீயா வேதனையே
பேருலகிலுனை யெப்போ தேரிலே காணுவேன் இப்போ
தேறாத வினையிலே தவிக்கின்றேனே— மகனே

வ-ம் ஆசைப்பாலா தோசி நானுன்னை யோசியாது ஆரண்யத்தில் அனுப்பினேனே உன்னைக் கோரமிருகம் கொன்று தின்று விட்டதே. நான் இனி உலகத்திலிருந்தென்ன பயன்.

சகோதரர் வ-ம் தந்தையே நாங்கள் பத்துப் பேர் இருக்கின்றோம். இது போதாதா ஒருவன் இல்லாவிட்டால் மோசமா.

யாக், வ-ம புதல்வர்களே நீங்கள் எத்தனை பேர் இருந்தபோதிலும் அவனுருவீர்களா அன்னவனின் பாலொழுகு முகத்தைப்பார்த்தாலும் பசி யடங்குமே அவனை இனி எவ்விதம் காண்பேன்.

பென்யமீன் வருதல்.

பென்யமீன் வ-ம். தந்தையே அதிக நேரமாகத்தாங்கள் மிகுந்த வியாகூலத்துடன் அழுத குரலோசையைச் செவியுற்ற நான் அவசரமாய் ஓடிவந்தேன். ஏன் அழுகின்றீர்கள்.

யாக் வ-ம். பாலகா தெரிவிக்கின்றேன்.

யா. வ-ம். பாலகா உனது பிறவியாகிய யோசேப்பு வனத்தில் மிருகத்தின் வாய்க்கிரையாகி மடிந்தான் அதற்காக மனம் வருந்தி மிக அழுதேன்.

பென்யமீன் புலம்பல்.

கண்ணுமணியின் வண்ணு—என்ற மெட்டு.

பல்லவி.

ஐயோ என்தன்னனே—ஆவியைப் போக்கினார்
மேவியே நீக்கினார் கானினிலே பெருமா மிருக்கத்தினால்— ஐ
1. அன்புள்ள அண்ணனையே அவனியில் தோத்தேனைய
வெம்பி அழுதேன் உய்ய
வேதனே நீதனே வாதனை யாகினேன் ஐ

2. அழருமிருத்த அண்ணன் ஆரண்யத்தன்னில் மாண்டான்
அடரு வனத்திலின்ருள் ஆவிநீக்கி கூவிஏங்கி பூவில் ஏங்கி ஐ

பெ. வ-ம். எனது ஆசைமிருத்த நேசம்பெருத்த பாசம் வருத்த அண்ணு தாங்கள் வனத்தில் மா மிருகத்தின் வாய்க்கிரையாகி மாண்டீர்களே இனி எவ்விதம் தங்களைப் பாராது மனம் ஆறுவேன் நினைவுதேருவேன்.

யாக். வ-ம். பாலகா நீயேன் கவலைபடைகின்றனை அந்த ஈசன் செயலின்படி நடந்திருக்கின்றன. இனி விசனப்படுதல் அழகல்ல பாலா.

ஷை வ-ம். பாலா நான் எவ்வளவுதூரம் மனதில் நினையாதிருந்தபோதிலும் அவனை நான் நேசித்த ஓர் பாசமானது மறவாதபடி அதிகவிசனத்தையே மூட்டுகின்றதே யென்செய்வேன்.

பஹாரியாலா—என்ற மெட்டு.

தந்தையைத் தேற்றுதல்.

பென்யமீன். பல்லவி

1. தந்தையே நீங்கள் அழவேண்டாம் தாஙகள்
தற்பரன் நமக்கு நன்மையாகவே செய்வார்
இப்புவிதனில் நம்மோடு வாசமே செய்வார்
அழவேண்டாம் தாங்கள்— தந்

2. ஆண்டாண்டுதோரும் அழுதாலுமே நாம்
மாண்டா ரெழுந்து நமிடம் வருவரோ ஐயா
ஆண்டவர் நமக்குத்துணையாகுவார் மெய்யா
அழவேண்டாம் தாங்கள்.

[illegible] வ-ம் தந்தையே இனித்தாங்கள் விசனமுறுதல் நனகலல நம்மை ஆட்கொண்ட பராபாமூர்த்தியாகிய ஈசன் யாவும் நன்மைக்கென்றே செய்து வருகின்ருர். ஆகையால் தாங்கள் கொண்ட மனவியாகூலத்தை அகற்றி மைந்தனென்னையே அன்னவனுக நினைத்து வருத்த மகற்றுங்கள் பிதாவே

யாக். வ-ம். அருமைக்கண்மணி நீதேருதல் சொல்லிய ஆறுதல் வார்த்தைகள் மனமகிழச் செய்தன இறந்தோர்க்காக வியாகூலம் கொள்வது வீண் நமக்கும் அதுவழி யாகையால் விசனத்தை நீக்குகின்றேன் கண்மணி கர்த்தரே நம்மை எல்லா விஷயத்திலும் காத்தருள் வாராக.

முதற்பாகம் முற்றிற்று.

கிறிஸ்துநாதர் பேரில்

# பஜனைக் கீர்த்தனைகள்.

சுஜனஜீவனு—என்றமெட்டு.

பல்லவி.

1. ஞானதீபமே உனை நம்பினேனுனுமே—மோக்ஷ ஞான
வானாதி தேவனே கோனே மண்ணிலே தானே
மனமே உனைத்தினமே நினைத்தேனே அன்பனே மோக்ஷ

2. மரியன்னைபாலா உனை வணங்கினேன் சிலா
வசந்தந்தாழ வருவாய் மீழக்கரங்குவித்தேனே மோக்ஷ

3. ஜோதியே நீயேநல்ல சுத்தனே துய்ய
நீதியே நினைந்தாதியே உனைநிதம் பணிந்தேனே மோக்ஷ

---

வா கலியுகவரதா வடிவேலவா—என்றமெட்டு.

ஆதியே ஜோதியேவா அருள்புரிய ஆ
அம்புவிதனிலுன்னை நம்பினேனே இவ்வேளை ஆ

1: தீதில்லாததேவா சிறியேனைக்காவா
நீதியுடனே நினைத்தேன் நேர்மையுடனே ஆ

2. துற்குணம் நீக்குவாய் நற்குணந்தரவா
சுத்தனே துதிசெய்திட்டேன் தொல்புவிதனில் ஆ

---

கனகாசலமாக்ஷி—என்றமெட்டு.

பல்லவி.

திரியேகனே வா வா உனை ஜெபித்தேனே காவா—மூவா தி

1. அருள்தனையே நீ புரிந்திடுவாய் அடியேனையே தினந்தெரிந் [திடுவாய்
கருமவினைகள் தீர்த்தவா
காதலுடனே நீதமுடனே திரி

2. அருமறை முதல்வா தேவா அன்புடனெனையே காவா
திருவே புகழ்ந்தேன் வா வா
சித்தம் வைத்தருள் அத்தனே தா திரி

3. ஐந்தப்பம் சிலமீன்களைக்கொண்டே ஐயாயிரம்பேர்களுக்கன்றே
பந்திபோஜனமளித்த
பாக்கியனே உனை நோக்கினேனே நானே — திரி

---

கண்டாலானந்தமே கந்தன்பாலாவிஷேகம்—என்றமெட்டு

பல்லவி.

பாதாரவிந்தமே பரப்பிரமரூபனே நின் — பாத
காதலுடனே துதித்தேன் தீதில்லாமலே [illegible]ன் — பாத

1. ஆதாரவாய் வேதமே விடுத்தாளும் அற்புதனே
தூதர்கள் தினந்துதிக்கும் துய்யதேரா நற்பாதனே
வேதமுதலானவனே ஆதிமறை நீதனே.
கோதில்லாத ஏசுமகாராஜனே—தினம்
பூதலந்தனில் புகழ்ந்தேன் வாசனே—பெரும்
பாதகர் வினைகள் தீர்த்த [illegible]சனே.
பணிந்தேனருள் தாராய்
நினைந்தேனெனைக்காராய்
மனமுவந்து சீராய் வரந்தந்தாழுவே நீ வசீராய் — பா

2. எல்லாவற்றையும் படைத்த வல்லமைத்தெய்வம் நீயே
பல்லுயிர்கள் ஈவழிக்கும் பரமா தயவாயே
தொல்லைதன்னையே தீர்த்திட்ட சுத்தனே வாமீயே
நல்லமனதுடனே பணிந்தேனே—எங்கள்
அல்லல்தனைத்தீர்த்த யேசு நாயனே—பெரும்
எல்லையில்லா அன்புமிகும் ஏகனே.
எந்தனையே காரும் உந்தனருள் தாரும்
மைந்தனுனும் நேரும் மனமகிழுடனுள் தோரும் — பா

---

சேந்துரிடந்துலங்குஞ் சீமானே—என்றமெட்டு

பல்லவி.

பானே உனை நம்பினேன் பாரில் நானே—நல்
பக்தர்க்கருளேபுரிந்த அத்தனே — ஏசு

1. கரங்குவித்தே துதித்தேன் காசினியில் நினைத்தேன்
வரமதையே கொடுப்பாய்
பரிபாலனே திரியேகனே கருணை தனைத்தருவாய் கோனே

2. கிருபை உண்மை காண்பியும் கீர்த்தியாகவே நீயும்.
பெருமையுடன் பாடினேன்
பெருமா உலகில்சிறு பாலனாகி
குருவாகவத் திரிந்தாய் உலாவி பல

---

பச்சமலை பவளமலை எங்களதுநாடு—என்றமெட்டு

பல்லவி.

1. மாநிலந்தன்னில் குழந்தை யாகவந்தபாலன்—தனை
வணங்குவீர் மறைநூலன்—அந்த
நாளிலே மனமுடன் பெரு
மாகனியினாலே நேர்ந்த பாவம் தீர்த்தசீலன்.

2. பெத்தலேகமில் பிறந்த சத்திய சருவேசன்—தனைத்
துத்தியம் செய்வீர் நேசன்—நம்
கஸ்திதீர்க்கும் வாசன்—மனப்
பக்தியாய் நினைந்தோர்க்கு நல் முத்திதரும் ஈசன்

3. கொல்கதாமலை தனிலுயிர் [illegible]கார்த்ததவாசன்—தமை
அடுத்தவர்க்கருள் நேசன்—பாவம்
விடுத்திடும் ஏசுராஜன்—தனைக்
குணமுடன் பணிந்திடுவீர் கோதில்லாத ஈசன்

---

காந்தி மகான்போலுண்டோ ஜீவகாருண்யனே—என்றமெட்டு

பல்லவி.

ஏசுராஜன் பாவந்தீர்க்கும் பரிகாரதேவன்—திருத்துவதின் மூவன்
தாசற்குகந்த தற்பராநிந்தன்
தாழ்ந்துப்பணிந்தேனே உனை நானே தினங்கோனே துதித்தேனே
இந்தத் தரணியில் மனுவாக நல்ல சற்குண முள்ளோராக—மிகத்
தாழ்மையுடனே போதனையே சாற்றின தேவனே
சகலர்க்குபகாரா உனைக்கு வலயமதில் நினைத்தேன்—ஏசுராஜன்

2 கன்னியின் பாலா நண்ணினேன் சீலா
கருணைபுரிவீர் நூலா
அன்பர்லோலா—மனுவேலா எனையாளாய்—அனு
தினந்துதித்தேனே காராய் குணமுடனருள் தாராய்
அதிகாலையுடனாக விசுவாசமுடனாக—வரம்
அரனே கொடுத்தருள்வீர் கிருபானே காங்குவித்தேனனே

---

தாதபாய்நவரோஜி—என்றமெட்டு

பல்லவி

சர்வலோகாதிபா
கருணையிவ்வேளை சரணம்புரிந்தேன் ஆதிபா— சர்

1. பாதம்பணிந்தேன் ஜோதிமுத்தையதாசன்
பாடினேன் அருள்தாரும் ஈசனே
தேடினேன்கிருபைதனையேவாசனே ஆதிபா— சர்

2. கருணைசெய் தேவனே நிருவேதுதித்தேன் நாதனே
கர்த்தனே பரிசுத்தனே உனை
நத்தினேன் அருள் அத்தனே தாரும் ஆதிபா— சர்

3. பரிசுத்ததேவனே தரிசித்தேன் மூவனே
பாரிலேமைந்தன் கோரினேன் நின்தன்
சேரிலேவந்தேன ஆசிகூறுவாய்—ஆதிபா சர்

---

ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே—என்றமெட்டு

பல்லவி.

சுந்தரா வந்தருள் மைந்தனுக்குன்னருள்
இந்தவேளை வரம் தந்திடுவாய்
ஜோதிமயமானவனே வேதனே கிருபைசெய்வாய்

1. வானதூதர் போற்றிப்புகழ்ந்துபாட
வல்லமையாகத்தினம் தினம்தேட
கானகத்தொனிகேட்ட கர்த்தாதி கர்த்தா
காட்டு மடத்தில் படுத்த ஜீவாதிபா— ச

2. பொன்னகராதிபன் மன்னுருவாக
பூதலந் தன்னில் வேதமுறையாக
கன்னியவயற்றிலவதரித்தவா
காதலோடு உம்மை நீதமாய்த் தேடினேன்— ச

3. ஆசைமிகும் தாசன் நேசமாய்ப்பாட
அன்புடனே உம் வரமதைத்தேட
காசினியில் அருள் கர்த்தனே நீரும்
கைகுவித்தேன் வரம ஐயனே தாரும்— ச

---

தினந்திருகழுகாசல மேவியே—என்ற மெட்டு.

பல்லவி.

1. அனந்தஞான சொரூபா உந்தனை அடிபணிந்து துதித்தேன்
அடியேனை ஆண்டருள்வாயே—அன்பாக நீயே
அடியேனை ஆண்டருள் வாயே

2. கனங்கொள் மகிமை தங்கிய தேவா கருணாகரதேவனே
கருணை புரிவாய் சிமோனே கர்த்தாதி கர்த்தா
கருணைபுரிவாய் சிமோனே

3. பரப்பிரம வடிவான சுவாமி பாரிலுருவானவா
பாவத்தை நீக்கும்வல்லவா—பதம பணிந்தேன்
பாவத்தை நீக்கும் வல்லவா

4. ஆதாமோ டேவைசெய் பாவமகற்றிட அருள்வடிவாகவந்த
அன்னை மரியின் பாலகா—அருள் [illegible]
அன்னை மரியின் பாலகா

---

அமரநகி—என்ற வர்ண மெட்டு.

பல்லவி.

தெய்வமிவர் எங்கள் குல தெய்வமிவர்
வையகந்தனில் நல்ல மனித ரூப மெடுத்த [தெ]

1. கருணையுடையவனே கர்த்தாதி கர்த்தனே
கழலினை பணிந்தேனே பழவினை தீர்த்த நாதனே [தெ]

2. வல்லமையான தேவா மரியாள் தன் பாலகா
பல்லுயிர் ஈவழிக்கும் பரம தேவா கருணை தாவா [தெ]

3. மோசே முனிவருக்கு சீயோன் மலை தனிலே
முன்னே வந்தருள் தந்த மன்னவா மரி அன்னைபாலகா [தெ]

---

வேலனே—என்ற வர்ணமெட்டு,

பல்லவி.

மேசியா ஏசுநாயகனர் நரரூபமாயினர் நமைமீட்க

1. மாசில்லாத மரிபாலன் மனுவுருவானதோர் சீலன்
நேசமாய் ஆசையாக காசினி தனிலாக
நிந்தையனைத்தையும் விந்தையாய் நீக்கிட மே

2, தொண்டர்க்கருள் புரிந்திடும்நீதா அண்டர்துதி சாற்றியவேத
தோத்திரம் செய்தேனே . பாத்திரமாய் நானே
தொடர் வினையகலவே படிமிசை உருவான மே

---

சாமிவிவேகானந்தா—என்ற மெட்டு.

பல்லவி.

1. கருணாகரதேவனே கருணைபுரிவாய் கோனே
கனிவினைதீர்த்த மனுவானஏசு அனுதினமுனதடி பணிந்தேனே
வருவாய் நீ தேவா குருவாய் வந்தவா
அருமறை முதல்வனே மிடிதனை தீர்ப்பாயே கோனே க

2. [illegible]பரனே சரணம் புரிந்தேனனே
சகலவரதஞான ராஜபவவினை தீர்த்தபரனே நேச
கிருபை புரிகுவாய் திருவே அருளீவாய்
கீர்த்தியாய்ப் பாடினேனே நேர்த்தியாகத் தேடினேனே க

---

செந்தூர் வாழ்ந்திடுங்குமரா—என்ற மெட்டு.

பல்லவி.

பாரிலே உருவானவா
பதந்தனையே அனுதினமு மனமுவந்து பணிந்தேன்.

1. பேருலகதிலே பெருமையாய்ப் புகழ்வேன்
நேரிலே பாலனுன் கூறியே திகழ்வேன்
காரியமாக கருணையே புரிந்தாய்
காதலாகவே, நீதமாகவே, பாதர்களை ரக்ஷிக்கப் பா

2. சிலமுடனே நல்ஜெவீகா நகரில்
பாலனுன் வாழ்பவன் பண்புடனீதில்
தாலமீதிலே உந்தன் தாழிணை பணிந்தேன்
தற்பராஅருள் அற்புதாபுகழ் நற்கிருபையே தருவாய் பா

3. தொல்லுலகதில் வல்வினை தீர்த்ததேவனே
சுத்தமரியன்னை வயிற்றிலுதித்தோனே
நல்லஅருள் தருவாய் நானிலத்தில் கோனே
நத்தினேன் ஜோதிமுத்து ஞானதிவித்தே கிருபைநீதி பா

## மங்களம்.

க்ஷேமஞ் சர்ச்சாஷனமேநாமம்—என்ற மெட்டு.

மங்களம் மங்களமே திங்கள்மும் மாரியுமே
மானிலத்தில் எங்குமே
வளமாகவே பெய்து வையகத்திலே
வாழ்கவேயாவரும் பூலோகத்திலே

1. வாமருள் புரிதிரு அவதார பரிபாலனே
திரமுடனடியவர் துதிக்கும் சீலனே
மைந்தனுன் சந்தோஷமாகத்தாமே
மங்களம் பாடினேன் இங்ஙனமே.

2. ஜெகமதிலக மகிழ்வுடன் தினம் மங்களமே
ஜெகவீர நகர்தனில் வாழும் சிறுவனுமே
தேசமெங்கும் புகழ்ஓங்கவுமே
சீருடன் மங்களம் பாடினேனே ம

ரக்ஷகர்பேரில் பஜனை கீர்த்தனை முற்றி[illegible]

---

முடிவுரை:—இச்சிறிய நூலை அன்புடன் கவனிக்கும் அறிவுமிகும் பெரியோரே அடியேன் விளம்பும் சிறிய விஞ்ஞாபனம் யாதெனில்:—

அதாவது நம்பாட்டியாகிய ஔவைகூறியுள்ள வாக்கியங்களில் (கற்றவரை ஒருநாளும் பழிக்கவேண்டா) மென்றபடியும் அத்துடன்

சலதரை வீழும்நீரும் சாகரந்தன்னைச்சார்ந்தால்
குலமென்று கொள்வதல்லாற் குன்றகடல் வெறுப்பதுண்டோ

என்ற செய்யுட் கிணங்க எனது பாடலை ஒப்புவீரென நம்பி இச்சரித்திரம் பஜனைப் பாடல்களும் என் புல்லறிவுக்கெட்டியவாறு பாடியிருக்கின்றேன். இதில் எவ்விதப் பிழைகளிருப்பினும் குற்றமென்பதை நீக்கிக்குணமென்பதைக் கைக்கொண்டு என் அற்பக்கவிகளை அங்கீகரிக்க வேண்டுகின்றேன்.

இப்புஸ்தகம் வேண்டுவோர் அடியில்கண்ட எமது விலாசத்திற்கு எழுதி பெற்றுகொள்ளலாம்.

விலாசம்:—
A. ஜோதிமுத்து உபாத்தியாயர்,
ந. ஜெகவீரபுரம்.
காடல்குடி போஸ்டு. (எட்டையபுரம் மார்க்கம்)

# கீதங்கள்

கன்று பசுவினை என்று—என்ற வர்ணமெட்டு.

பல்லவி

ரகுநாத பதியுடன் [illegible]
காலில மீதிரோ [illegible] ம்

1 ஆகுபசோ [illegible] ளும் அரசனையே எக்காளும்
திருப்பாக [illegible]—கீதனை வேதனை காதனை பாடிடேனும்

2 இந்தியாவை என் [illegible] ளும் எழிலுடன் அரசாளும்
ஜார்ஜ் ராஜனுடன்
அரசி குயின் மேரி அன்புடன் வாழ்கவே

3 தேசமதி லென்றென்றும் சாந்த வாழ்க வேலனும்
பாசமாய் அருள [illegible]
புலவர்களின் [illegible] கீதசிலமுடன் —

சந்தோஷம் சண்முகன் சன்னதியென்றும்—என்றமெட்டு

பல்லவி.

வாழ்கவே—மன்னன் ஜார்ஜ் ராஜனென்றும் வா
யாவில்லாத பாலுண போசனை
காதலின்னருளால் தேசமதிலே நன்றாய் வா

1 தாழ்வு இல்லாமலே சகலவிஷயத்தும்
சகியர் கடைத்து வருவதையே தினமும்
செல்வியுடனே கோமான் கவனித்து வரவும்
கீர்த்தியுடன் பூதலத்தில் சேர்த்தியுடன் ராஜரீகம் வா

2 என்றும் புகழ்பெறும் இங்கிலாண்டிறைவன்
சக்ராதிபதியான இறைவன்
பக்கமில்லாமலே பக [illegible] வாழவும்
பாவர்கள் அதிசெர் [illegible] போம் [illegible]